செ.வெ.எண்.28 நாள்.12.05.2017

# மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தனியார் துறை வேலைவாய்ப்புக் கூட்டம்

திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 12.05.2017 அன்று மதியம் 3.00 மணிக்கு தனியார் வேலைவாய்ப்புக் கூட்டம் நடைபெற்றது. இதில் 340 வேலை நாடுநர்கள் கலந்து கொண்டனர். 11 வேலையளிப்போர் கலந்து கொண்டு தங்களிடம் காலியாக உள்ள 200 இடங்களுக்கு தேவைப்படும் நபர்கள் பற்றிய விபரங்களை எடுத்துரைத்தனர்.

1. SMART CAREER EDUCATION, PALAYAMKOTTAI.
2. STERLING INSTITUTE OF SKILL DEVELOPMENT, TIRUNELVELI.
3. NELLAI MOTOR TVS VANNARPETTAI.
4. FRIENDS COMPUTERS, PALAYAMKOTTAI.
5. IWIN, UTL TECHNOLOGIES, PALAYAMKOTTAI.
6. SRI SASTHA ENGINEERING COMPANY ARALVAIMOLI.
7. SIVA SAKTHI TRADERS, TIRUNELVELI.
8. P.M.SANKARA SUBBIAH MEMORIAL ITI, V M CHATHHRAM.
9. NKV FURNITURE MALL, TIRUNELVELI.
10. EQUITAS, TIRUNELVELI.
11. IOB-RSETI, TIRUNELVELI.

போன்ற நிறுவனங்கள் கலந்து கொண்டன. திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்(இ.வே.ப) திருமதி.மா.மல்லிகாராணி, அவர்கள் வேலை காலியிடங்கள் தனியார் துறையில் அதிக அளவில் உள்ளது எனவும், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்கள் அரசுப்பணி கிடைக்கும் வரை தனியார் துறையில் பணியாற்ற முன்வரவேண்டும் எனவும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தன்னார்வ பயிலும் வட்டம் என்ற போட்டித்தேர்வுகளுக்கு பயிற்றுவிக்கும் நூலகம் இயங்கி வருகிறது எனவும் அதனை பயன்படுத்தி போட்டித்தேர்வுகளில் வெற்றி பெற்று அரசுப்பணியிடங்களில் நியமனம் பெற இயலும் எனவும் எடுத்துரைத்தார்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் அவ்வப்போது எஸ்.எஸ்.சி.(பல்செயல் உதவியாளர்) மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் அறிவிக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலைக் காவலர் பணிக்கு விண்ணப்பித்தவர்கள், இவ்வலுவலகத்தில் நடத்தப்படும் இலவசப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளுமாறும் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து நடைபெற்ற நேர்காணல் பேட்டியின் முடிவில் 94நபர்கள் வேலைக்கு தேர்வுக்கும் 45 நபர்கள் பயிற்சிக்கும் தேர்வு செய்யப்பட்டனர். இது போன்ற தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கும் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக்கிழமைகளில் மதியம் 3.00 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் நடத்தப்படும் என திருமதி. மா. மல்லிகாராணி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (இ.வே.ப) அவர்கள் தெரிவித்தார்.

மா.மல்லி 12.5.17
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்(இ.வே.ப)
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி